பெயர் : 　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　திகதி :

## வரலாறு ஆண்டு 5

**<u>சுதந்திரத்திற்குப் போராடிய தலைவர்களை விவரங்களுக்கு ஏற்ப இணைத்திடுக.</u>** ( பாடநூல் பக்கம் 76-77 )

**அமாட் போஸ்தாமாம்**
**(Ahmad Boestamam)**

- ★ 1946ஆம் ஆண்டில் 'அங்காத்தான் பெமுடா இன்சாப்' (API) தலைவர்.
- ★ 1955ஆம் ஆண்டில் மலாயா மக்கள் கட்சியைத் (PRM) தோற்றுவித்தார்.
- ★ 'சுவாரா ராக்யாட்' (Suara Rakyat), 'வோய்ஸ் ஒப் தி பீப்பிள்' (Voice of The People) நாளிதழ்களை வெளியிட்டார்.




**டாக்டர் புர்ஹானுடின் அல்ஹெல்மி**
**(Dr. Burhanuddin al-Helmi)**

- ★ 1945ஆம் ஆண்டின் மலாயாத் தேசிய மலாய்க்காரர்கள் கட்சியின் (PKMM) இரண்டாம் தலைவர்.
- ★ 1956ஆம் ஆண்டில் மலாயா இஸ்லாமியர் கட்சிக்குத் (PAS) தலைமையேற்றார்.
- ★ 'மலாயு ராயா' சிந்தனைக்குப் போராடினார்.
- ★ 'ஐக்கிய தீபகற்ப இந்தோனேசியக் குடியரசு கட்சிக்குத் (KRIS) தலைமையேற்றார்.



**டத்தோ ஒன் பின் ஜபார்**
**(Dato' Onn bin Ja'afar)**

- ★ 1946ஆம் ஆண்டில் மலாய் காங்கிரஸின் தலைவர்.
- ★ 1946ஆம் ஆண்டில் அம்னோவின் (United Malays National Organisation) முதல் தலைவர்.
- ★ ஜொகூர் மந்திரி பெசாராக நியமிக்கப்பட்டவர்.
- ★ மலாய்க்காரர்களை ஒன்றிணைத்து மலேயன் யூனியனை எதிர்த்தவர்.
- ★ மலாயா சுதந்திரக் கட்சியைத் (IMP) தோற்றுவித்தவர்.



**அபு பக்கார் அல் பகீர் (Abu Bakar al-Baqir)**

- ★ 1934ஆம் ஆண்டு மஹாட் அல் எஹ்யா அஸ்ஷரிப்பைத் (al-Ehya Assharif) தோற்றுவித்தார்.
- ★ 1948ஆம் ஆண்டில் ஒரே மலாயா உயர்நிலை சமய சபையைக் (MATA) கூட்டினார்.
- ★ 1948ஆம் ஆண்டில் ஹிஸ்புல் முஸ்லிமின்னுக்குத் தலைமையேற்றார்.



**துங்கு அப்துல் ரஹ்மான் புத்ரா அல் ஹஜ் இப்னி அல்மர்ஹோம் சுல்தான் அப்துல் ஹமிட் ஹலிம் ஷா**
**(Tunku Abdul Rahman Putra Al-Haj ibni Almarhum Sultan Abdul Hamid Halim Shah)**

- ★ அம்னோவின் இரண்டாம் தலைவர்.
- ★ 1952ஆம் ஆண்டில் கூட்டணிக் கட்சியைத் தோற்றுவித்தவர்.
- ★ 1956ஆம் ஆண்டில் லண்டன் சென்ற கூட்டரசு மலாயா சுதந்திரக் குழுவிற்குத் தலைமையேற்றார்.
- ★ கூட்டரசு மலாயாவின் முதலாவது பிரதமர்.



**ஈஷாக் ஹஜி முகமட் (Ishak Haji Muhammad)**

- ★ 1934ஆம் ஆண்டு அரசியலில் தீவிரமாக ஈடுபட மூன்றாம் நிலை மஜிஸ்திரேட் பதவியிலிருந்து விலகினார்.
- ★ உத்துசான் மெலாயு நாளிதழைத் தோற்றுவித்தார்.
- ★ 1957ஆம் ஆண்டு மலாயா தொழிலாளர் கட்சிக்குத் தலைமையேற்றார்.



LIVEWORKSHEETS